ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ரு'தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ செய்யதாமரை ॥

*This document[*] has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

[*] This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ செய்யதாமரை ॥

## அர்ச்சாவதாரமே எளிதென அருளிச் செய்தல்

‡செய்ய தாமரைக் கண்ணனாய்⋆
உலகேழும் உண்ட அவன் கண்டீர்⋆
வையம் வானம் மனிசர் தெய்வம்⋆
மற்றும் மற்றும் மற்றும் முற்றுமாய்⋆
செய்ய சூழ் சுடர் ஞானமாய்⋆ வெளிப்
பட்டிவை படைத்தான்⋆
பின்னும் மொய் கொள் சோதியோடாயினான்⋆ ஒரு
மூவர் ஆகிய மூர்த்தியே (1)

மூவர் ஆகிய மூர்த்தியை⋆ முதல் மூவர்க்கும் முதல்வன் தன்னை⋆
சாவம் உள்ளன நீக்குவானைத்⋆ தடங்கடல் கிடந்தான் தன்னைத்⋆
தேவதேவனைத் தென் இலங்கை⋆ எரி எழச் செற்ற வில்லியை⋆
பாவ நாசனைப் பங்கயத் தடங்கண்ணனைப்⋆ பரவுமினோ (2)

பரவி வானவர் ஏத்த நின்ற⋆
பரமனைப் பரஞ்சோதியை⋆
குரவை கோத்த குழகனை⋆ மணி
வண்ணனைக் குடக் கூத்தனை⋆
அரவம் ஏறி அலை கடல்
அமரும்⋆ துயில் கொண்ட அண்ணலை⋆
இரவும் நன் பகலும் விடாது⋆ என்றும்
ஏத்துதல் மனம் வைம்மினோ (3)

வைம்மின் நும் மனத்தென்று⋆ யான்
உரைக்கின்ற மாயவன் சீர்மையை⋆
எம் மனோர்கள் உரைப்பதென்⋆ அது நிற்க
நாள்தொறும்⋆ வானவர்
தம்மை ஆளும் அவனும்⋆ நான்முகனும்
சடைமுடி அண்ணலும்⋆

www.prapatti.com

செம்மையால் அவன் பாத பங்கயம்⋆
    சிந்தித்தேத்தித் திரிவரே (4)

திரியும் காற்றோடகல் விசும்பு⋆
    திணிந்த மண் கிடந்த கடல்⋆
எரியும் தீயோடிரு சுடர் தெய்வம்⋆
    மற்றும் மற்றும் முற்றுமாய்⋆
கரிய மேனியன் செய்ய தாமரைக்
    கண்ணன்⋆ கண்ணன் விண்ணோர் இறை⋆
சுரியும் பல் கருங்குஞ்சி⋆ எங்கள்
    சுடர் முடி அண்ணல் தோற்றமே (5)

தோற்றக் கேடவை இல்லவன் உடையான்⋆
    அவன் ஒரு மூர்த்தியாய்⋆
சீற்றத்தோடருள் பெற்றவன் அடிக்
    கீழ்ப்⋆ புக நின்ற செங்கண்மால்⋆
நாற்றத் தோற்றச் சுவை ஒலி⋆ உறல்
    ஆகி நின்ற⋆ எம் வானவர்
ஏற்றையே அன்றி⋆ மற்றொருவரை
    யான் இலேன் எழுமைக்குமே (6)

எழுமைக்கும் எனதாவிக்கு⋆ இன் அமுதத்தினை எனதார் உயிர்⋆
    கெழுமிய கதிர்ச் சோதியை⋆ மணி வண்ணனைக் குடக் கூத்தனை⋆
விழுமிய அமரர் முனிவர் விழுங்கும்⋆ கன்னற்கனியினை⋆
    தொழுமின் தூய மனத்தராய்⋆ இறையும் நில்லா துயரங்களே (7)

துயரமே தரு துன்ப இன்ப
    வினைகளாய்⋆ அவை அல்லனாய்⋆
உயர நின்றதோர் சோதியாய்⋆
    உலகேழும் உண்டுமிழ்ந்தான் தன்னை⋆
அயர ஆங்கு நமன் தமர்க்கு⋆ அரு
    நஞ்சினை அச்சுதன் தன்னை⋆
தயரதற்கு மகன் தன்னை அன்றி⋆
    மற்றிலேன் தஞ்சம் ஆகவே (8)

www.prapatti.com

தஞ்சம் ஆகிய தந்தை தாயொடு⋆
    தானுமாய் அவை அல்லனாய்⋆
எஞ்சலில் அமரர் குலமுதல்⋆
    மூவர் தம் உள்ளும் ஆதியை⋆
அஞ்சி நீர் உலகத்துள்ளீர்கள்!⋆
    அவன் இவன் என்று கூழேன்மின்⋆
நெஞ்சினால் நினைப்பான் யவன்⋆ அவன்
    ஆகும் நீள் கடல் வண்ணனே (9)

கடல் வண்ணன் கண்ணன்⋆ விண்ணவர்
    கரு மாணிக்கம் எனதார் உயிர்⋆
படவரவின் அணைக்கிடந்த⋆
    பரஞ்சுடர் பண்டு நூற்றுவர்⋆
அடவரும் படை மங்க⋆
    ஐவர்கட்காகி வெஞ்சமத்து⋆ அன்று தேர்
கடவிய பெருமான்⋆ கனை கழல்
    காண்பதென்றுகொல் கண்களே (10)

‡கண்கள் காண்டற்கரியனாய்க்⋆
    கருத்துக்கு நன்றும் எளியனாய்⋆
மண் கொள் ஞாலத்துயிர்க்கெல்லாம்⋆
    அருள் செய்யும் வானவர் ஈசனை⋆
பண் கொள் சோலை வழுதி நாடன்⋆
    குருகைக்கோன் சடகோபன் சொல்⋆
பண் கொள் ஆயிரத்திப்பத்தால்⋆
    பத்தராகக் கூடும் பயிலுமினே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com